**IN THE COURT OF THE ASSISTANT SESSIONS JUDGE OF ATTUR**

**SC.No. 278/2018**

**Deposition of: PW - 2 (LW- 8 )**

| | | | |
|---|---|---|---|
| **Name** | : தேவி | **Father Name :** | |
| **Village** | : | **Taluk** | : |
| **Nationality** | : | **Religion** | : |
| **Calling** | : | **Age** | : |

**Solemnly affirmed by in accordance with the provision of Oath Act 44 of 1969 Date: 30.10.2023 at 11.45 a.m to 11.55 a.m.**

எதிரிகள் மூவரும் நீதிமன்றத்தில் ஆஜர். அவர்களுடைய வழக்கறிஞர் நீதிமன்றத்தில் ஆஜர்.

<u>முதல் விசாரணை:</u>

நான் வீரகனூரில் முதல் வார்டில் குடியிருக்கிறேன். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். கடந்த 18.12.2017 அன்று நான் வேலைக்கு சென்று இருந்தேன். என் மகனுக்கு உடல்நிலை சரியில்லை அதனால் என் கணவர் அங்குசாமி அவரை மருத்துவமனைக்கு அழைத்து செல்ல இருந்தார். அப்போது தன்ராஜ் என்பவர் அவர் சாப்பிட்ட தண்ணீரை என் கணவர் மீது ஊற்றினார். அதை கேட்டதற்கு ஆமா டா தேவடியா மகனே அப்படி தான் ஊத்துவேன் என்று சொல்லி இரும்பு பைப்எடுத்து வந்து என் கணவரை தன்ராஜ் அடித்தார். பிறகு மாசிமலை என்பவர் உருட்டு கட்டையால் என் கணவரை தாக்கினார். அதன் பிறகு வரதம்மாள் மற்றும் பழனிசாமி அவரை கீழே தள்ளி எட்டி உதைத்துள்ளனர். தன்ராஜ்ன் தங்கை சிலம்பரசி என் கணவரை செருப்பால் அடித்தால். அவருடைய அப்பா அவனை உயிரோடு விடாதே, அந்த தேவடியா மகனை அடித்து சாவடி என்று கூறினார். எல்லோரும் அடித்ததில் என் கணவருக்கு ரத்தம் வந்தவுடன் அங்கிருந்து ஓடிவிட்டார்கள். பிறகு அக்கம் பக்கம் இருப்பவர்கள் 108 க்கு போன் செய்து அவரை மருத்துவமனையில் சேர்த்தார்கள். போலீசார் என்னை சம்பவம் குறித்து விசாரித்தார்கள்.

குறுக்கு விசாரணை

1) சம்பவம் எவ்வாறு நடந்தது என்று எனக்கு நேரடியாக தெரியாது. என் கணவரை முதன் முதலில் நான் மருத்துவமனையில் வைத்துதான் பார்த்தேன். என் வீடு

முன்பு இருந்த அமைப்பின் படி நாங்கள் எதிரி வீட்டு வாசலுக்கு செல்லவேண்டியது இல்லை . எதிரிகள்தான் எங்கள் வீட்டு வாசல் வழியாக வரவேண்டும் . சம்பவம் நடந்து 2 நாட்களில் காவல் துறையினர் என்னை விசாரித்தார்கள். சம்பவம் நடந்து 3 நாட்களாக காவல் துறையினர் விசாரிக்கவில்லை, புகாரும் பதியவில்லை என்றால் அது சரியல்ல. மேற்படி புகார் பொய் என்பதால் தான் உடனடியாக எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் அது தவறு. ஏற்கனவே எங்களுக்கும் எதிரிகளுக்கும் பேச்சுவார்த்தை இல்லை என்றால் சரிதான். சாட்சி அல்லிமுத்து என்பவர் என் பெரிய மாமனாரின் மகன் ஆவார். சாட்சி தமிழரசன் எனக்கு சொந்தமா என்றால் இல்லை.

2) சாட்சி அல்லிமுத்துவிற்கும் எதிரிகளுக்கும் ஏற்கனவே தகராறு இருந்து வந்தது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. நான் சொல்வது போன்று எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்றும் எதிரிகளுக்கும் எங்களுக்கும் ஏற்கனவே முன்விரோதம் இருந்ததால் என் கணவர் கொடுத்த பொய் புகாருக்கு ஆதரவாக நான் சாட்சியம் அளிக்கிறேன் என்றும் ஆஜர் எதிரிகளுக்கும் இவ்வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்றும் சொன்னால் சரியல்ல.

" என்னால்/ என் முன்பாக மேற்படி சாட்சியம் பதியப்பட்டு, சாட்சிக்கு பொருள் விளக்கப்பட்டு/ படித்து காண்பிக்கப்பட்டு, அது சரி என அவரால் ஒப்புக்கொள்ளப்பட்டது."

**sd/-K.Ananthan**
**Assistant Sessions Judge,**
**Attur.**